பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
27 10 2024 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

- தமிழ்நாட்டில் மின் இழப்பை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறு மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கட்டார் கேட்டுக்கொண்டுள்ளார்.

- மதுரை மாவட்டத்தில் வெள்ளப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

- தமிழகம் முழுவதும் 4 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

- இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

*<<<<>>>>*

பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

*<<<<>>>>*

2035ஆம் ஆண்டு விண்ணில் இந்தியாவுக்கு சொந்தமான விண்வெளி நிலையம் அமைக்கப்படும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இந்த விண்வெளி நிலையம் பாரதீய விண்வெளி நிலையம் என்று அழைக்கப்படும் என்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

இந்திய விண்வெளித் துறையின் விரைவான வளர்ச்சிக்கு பொதுத்துறை – தனியார் பங்களிப்பு முக்கியமானதாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

விண்வெளித் துறையில் தனியார் முதலீடுகளுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதால் அத்தறை புதிய எழுச்சியை பெற்றுள்ளதாகவும், பல தனியார் நிறுவனங்கள் விண்வெளித் துறையில் நுழைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விண்வெளித் துறையில் மட்டும் ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் எண்ணிக்கை 300ஆக அதிகரித்துள்ளது என்றும், இது விண்வெளித்துறை வர்த்தக ரீதியாக பெரிய அளவில் வளர்ச்சி பெறுவதற்கு பங்களிப்பதாகவும் அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

மதுரை மாவட்டத்தில் வெள்ளப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

கனமழையால் மதுரை மாநகரில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நேற்று நேரில் ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

<<<<>>>>

தமிழகம் முழுவதும் நடப்பாண்டு 4 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மாநில கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் உளுந்து விற்பனை மையத்தை நேற்று தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர், நெல் கொள்முதல் தொடர்பாக விவசாயிகளுக்கு 928 கோடி ரூபாய் பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்.

இதனால் 56 ஆயிரத்து 883 விவசாயிகள் பயனடைந்ததாகவும், குறுவை நெல் கொள்முதல் நிறைவடையும் நிலையில் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 164 ரேஷன் கடைகள் புதிதாக திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ரேஷன் கடையில் வினியோகம் செய்ய பருப்பு, பாமாயில், கோதுமை உள்ளிட்ட உணவுப் பொருட்கள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாகவும் மத்திய அரசு மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யும் கோதுமையை 8 ஆயிரத்து 100 மெட்ரிக் டன்னில் இருந்து 17 ஆயிரத்து 100 மெட்ரிக் டன்னாக உயர்த்தியுள்ளது என்றும் டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

<<<<>>>>

மதுரை மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அனைத்துத் துறை அலுவலர்களைக் கொண்ட 6 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வட்டத்திற்கும் மொத்தம் 11 பல்துறை மண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கனமழை காரணமாக மதுரை மாநகராட்சிப் பகுதிகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள செல்லூர், விளாங்குடி, ஆணையூர் பகுதிகளில் 374 வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது.

இதனால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பாக வெளியேற்றி அவர்களை நிவாரண முகாம்களில் தங்க வைத்து உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிப்புக்குள்ளான பகுதிகளில் 5 ஆயிரத்து 215 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், 74 மருத்துவ முகாம்களும், 44 கால்நடை மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

கனமழையைத் தொடர்ந்து நகரில் தேங்கிய மழைநீரை வெளியேற்ற 38 நீர் இரைப்பான்கள் மற்றும் 44 ஜே.சி.பி. இயந்திரங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், செல்லூர் கண்மாயில் இருந்து உபரி நீரை வைகை ஆற்றுக்கு கொண்டு செல்ல புதிதாக கால்வாய் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் 240 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் தூர்வாரும் பணி முடிக்கப்பட்டுள்ளதாகவும் மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள 54 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் வனப் பகுதியை ஒட்டியுள்ள பகுதி மக்கள் தீபாவளிப் பண்டிகையின்போது அதிக ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிக்க வேண்டாம் என்று வனத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

வன உயிரினங்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் தீபாவளியைக் கொண்டாடுமாறு பொதுமக்களை நீலகிரி மாவட்ட வன அலுவலர் திரு. கௌதம் கேட்டுக்கொண்டுள்ளார்.

வனப் பகுதியில் உள்ள காட்டெருமை, மான், புலி, சிறுத்தை, கரடி உள்ளிட்ட வன விலங்குகள் பட்டாசு சத்தம் கேட்டால் அச்சமடைவதோடு, அவை வேறு பகுதிக்கு இடம்மாறும் நிலை ஏற்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் மின் வினியோகத்தின்போது மின் இழப்பை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறு மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கட்டார் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று மத்திய மாநில அரசுகளின் சார்பில் நடைபெற்று வரும் மின்திட்டங்கள் குறித்து மாநில மின்சாரத்துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி மற்றும் உயரதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

வடசென்னை 800 மெகாவாட் மின்திட்டத்தின் 3வது நிலை 660 மெகாவாட் உடன்குடி அனல் மின் திட்டம், 660 மெகாவாட் எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல திட்டம், 600 மெகாவாட் எண்ணூர் விரிவாகக் மின்திட்டம் ஆகிய அனல்மின் திட்டங்களின் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்துமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மேம்படுத்தப்பட்ட மின்வினியோக திட்டத்தின்கீழ் மின் இழப்பை குறைப்பதற்காக 8 ஆயிரத்து 932 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய மாநில அரசு அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அனைத்துத் துறை அலுவலர்களை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் அதிகாரிகளுடன் அவர் நேற்று ஆலோசனை நடத்தினார்.

அப்போது பேசிய அவர், மழைக்காலத்தின்போது அனைத்து துறையினரும் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலமாக பணிகளை விரைவாகவும், வெற்றிகரமாகவும் முடிக்க முடியும் என்று கூறினார்.

எண்ணூர் முகத்துவாரத்தில் படிந்துள்ள சாம்பல் கழிவுகளை அகற்ற வடசென்னை அனல்மின் நிலையத்தின் நிதியுதவியாக 28 கோடி ரூபாய் வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சென்னை மாநகரில் மழைக் காலத்தின்போது தண்ணீர் தேங்காமல் இருக்க மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள மண்டலங்களில் சீரமைப்புப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஜார்ஜியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆளும் ஜார்ஜியன் ட்ரீம் கட்சி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நடப்பாண்டு பாகிஸ்தானில் 41 குழந்தைகளுக்கு போலியோ பாதிப்பு இருப்பது தெரியவந்துள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்தில் மரங்களை வெட்ட தடை விதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. சுக்விந்தர் சிங் சுகு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திருவண்ணாமலை மாவட்டம் சாத்துனூர் அணையில் இருந்து ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் தென்பெண்ணை ஆற்றின் கரையோரம் உள்ள 14 கிராம மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சாதி வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் தங்களது புகார்களை

1 8 0 0 2 0 2 1 9 8 9

என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்யில் அளிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ரயில்பாதை பராமரிப்புப் பணி காரணமாக சென்னை கடற்கரை – தாம்பரம் - செங்கல்பட்டு வழித்தடத்தில் இன்று காலை முதல் மாலை வரை மின்சார ரயில்சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

விசாவுக்கு விண்ணப்பிப்பதற்காக போலிச் சான்றிதழ்களை தயார் செய்து அளித்த ஹைதராபாதைச் சேர்ந்த 2 பேரை சென்னை மாநகர காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

சென்னை கிண்டியில் உள்ள தேசிய திறன் பயிற்சி நிலையத்தின் பட்டமளிப்பு விழா இன்று நடைபெற உள்ளது.

<<<<>>>>

சென்னை கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் நேற்று ஒருநாள் முழுவதும் சிறப்பு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டதாக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

அகமதாபாதில் பகலிரவு போட்டியாக நடைபெற உள்ள இந்த ஆட்டம் பிற்பகல் 1.30 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>